# 20

# இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

இவ்வுலகமானது பெரியதாகவும், பல பாகங்களை உடையதாகவும் இருந்தாலும், தெய்வீக வசனங்களின்படி, இது நித்தியத்தில் நாம் வாழப் போகின்ற வாழ்வுக்கு நம்மை ஆயத்தம் செய்துகொள்ளும் இடமாகவே உள்ளது. ஆகவே, இங்கு வாழ்வது என்பது ஒரு சுருக்கமான ஆரம்பமாகவே உள்ளது. ஒவ்வொரு மனிதரும் ஒரு உயிருள்ள ஆத்துமாவாக இருக்கிறார், அவர் இவ்வுலகத்திற்கு அப்பால் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ என்றென்றும் வாழ்வதற்குச் சென்றடைய வேண்டியவராய் இருக்கிறார். நமக்கு என்றென்றைக்குமான ஒரு வாழ்வு அல்லது என்றென்றைக்குமான ஒரு அழிவு உண்டென்று புதிய ஏற்பாடு விளக்குகின்றது (மத். 25:46). இனிவரும் வாழ்வில் நித்திய ஜீவனுக்கும் நித்திய மரணத்துக்கும் இடையில் தங்குவதற்கென்று நமக்கு இடம் ஒன்றும் இல்லை. மரணத்தின்போது அல்லது இயேசுவின் மறுவருகையின்போது நமது அடைவிடமானது என்றென்றைக்குமாக முத்திரையிடப்படுகின்றது. நித்திய உலகத்திற்குள் பிரவேசித்த பிறகு, தேவனுடனான நமது உறவு நிலையை மாற்றிக் கொள்வதற்கு இரண்டாவது வாய்ப்புகள் எதுவும் இருக்காது. என்ன ஒரு தெளிவான சிந்தனை! இயேசுவைக் குறித்து நாம் என்ன செய்கிறோம் என்பது நித்தியத்துடன் தொடர்புள்ளதாய் இருக்கிறது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராகி, உங்கள் வாழ்வை நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து, அதன் மூலம் இப்பொழுது ஒரு பரிபூரணமான வாழ்வையும் (யோவா. 10:10) மற்றும்,

*வரப்போகும் உலகத்தில் நித்திய வாழ்வையும் (1 யோவா. 2:25) பெற்றுக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.*

*"சபையின்" உண்மையான உறுப்பினராவது எப்படி என்ற இப் பாடத்தின் நிறைவுப்பகுதியை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள், வேதவசனங்களின் மூலம் இக்கருத்து உங்களுக்கு முன் வைக்கப் பட்டுள்ளது. இவ்வுலகத்திற்கு வந்து, தமது வாழ்வு, போதனைகள் மற்றும் அன்பினால், தேவனையும், அவரது சித்தம் என்ன என்பதையும் விளக்கப்படுத்திய - தேவனுடைய குமாரனாகிய - இயேசு கிறிஸ்துவுக்கு நீங்கள் சுருக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டீர்கள். அவர் நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து, அவரது இரட்சிப்பின் நற்செய்திக்குக் கீழ்ப்படிகிற யாவரும்,தேவனுடைய பிள்ளைகளாகி வாழ, வழி வகுத்தார். மேலும் நீங்கள், அவரது வாழ்வு மற்றும் மரணத்தின் விளைவாக, ஆரம்பமாகி, தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும் சபையின் இயல்பு பற்றியும் கவனமாகப் படித்திருக்கிறீர்கள். ஒருவர் சபையில் எவ்விதம் பிரவேசித்து, இவ்வுலகில் அச்சபையாராக எவ்விதம் வாழ்கிறார் என்பதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் ஒரு பெரிய கேள்விக்கு, நீங்கள் இதுவரை சிந்தித்ததிலேயே மிக வினயமான கேள்விக்கு வந்து சேர்ந்திருக் கிறீர்கள்: "இயேசுவைக் குறித்து நான் என்ன செய்வேன்?"*

*நீங்கள் கிறிஸ்தவராகும்படி உங்கள் இருதயத்தில் நிர்ணயம் செய்து கொண்டு, எஞ்சியிருக்கும் உங்கள் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவை உண்மையுடன் பின்பற்ற வேண்டும் என்பதே எல்லா கிறிஸ்தவர்களின் உண்மையான ஜெபமாகவும், ஊக்கமான நம்பிக்கை யாகவும் உள்ளது. நீங்கள் இப்பாடத்தைப் படிக்கையில், ஏற்கனவே உங்களுக்குள்ளாகவே, "நான் ஒரு கிறிஸ்தவனாக விரும்புகின்றேன்" என்று கூறியிருக்கலாம். "ஒரு கிறிஸ்தவராவது பற்றி எனக்குச் சில கேள்விகள் உண்டு, அவற்றிற்கு விடை அளிக்கப்படும்போது நான் கிறிஸ்தவராவேன்" என்று நீங்கள் எண்ணியிருக்கலாம்.*

*நீங்கள் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால், இந்நூலின் எஞ்சியுள்ள இப்பகுதியைக் கவனமாகப் படியுங்கள். இது சில விடை களை அளிக்கும். மேலும் இது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்த வராக வாழ்வதற்குரிய உங்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தேவை யான செயல்பாடுகள் சிலவற்றைப் படிப்படியாகப் பட்டியலிட்டு விளக்கமும் அளிக்கும்.*

## படி ஒன்று: இரட்சிப்பு

*முதலாவது படி கிறிஸ்தவராகுதல் எனப்படுகிறது. இவ்வுலகத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள எவர் ஒருவரும் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு (யோவா. 8:24), மனந்திரும்பி (அல்லது அவரது பாவங்களி லிருந்து திரும்பி, அப். 17:30), இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை யிட்டு (ரோமர் 10:10) மற்றும் பாவங்களின் மன்னிப்பிற்காகக் கிறிஸ்து வுக்குள் ஞானஸ்நானம் பெற்றால் (அப். 2:38) ஒரு கிறிஸ்தவராக முடியும்.*

*நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகளுக்கு நாங்கள் இங்கு பதில் அளிக்கின்றோம்:*

### *"குழந்தைகளைப் பற்றி என்ன கூறப்படுகிறது?"*

*புதிய ஏற்பாடானது, பிறந்த குழந்தைகள் அல்லது சிறு குழந்தைகளின் ஞானஸ்நானத்தைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடு வதில்லை. அவர்கள் கர்த்தருக்கு முன் பாவமற்றவர்களாய், ஒன்றுமறி யாதவர்களாய், பாதுகாப்புடன் இருப்பதால் அவர்களை ஞானஸ் நானப்படுத்தத் தேவையில்லை. அவர்கள் நன்மை தீமை இன்னதென்று அறியாதிருப்பதால் தேவனுடைய பார்வையில் அவர்கள், கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை. கர்த்தர், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்த பிறகு (மற்ற எல்லா மக்களைப் போல) அவர்கள் கர்த்தருடைய இரட்சிப்பின் வழிக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாக வேண்டும். ஆயினும் அவர்கள் ஒன்றுமறியாத நிலையில் இருக்கையில், அவர்கள் பாவம் எதுவும் செய்யாதிருப்பதால், தேவனுக்கு முன்பாகப் பாதுகாப்பான நிலையிலேயே இருக்கின்றனர். புரிந்துகொள்ளும்படித் தேடும் அவர்களின் இருதயங்களுடனும், தங்களை வழி நடத்துபவர்கள்மேல் உள்ள முழு நம்பிக்கையுடனும் உள்ள அவர்களின் நிலை, உறுதியான நம்பிக்கை மற்றும் போதனையை ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவை யாவும், வயது முதிர்ந்தவர்களால் பின்பற்றப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன (மத். 18:3). குழந்தைகளைப் பற்றி இயேசு, "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையதாயிருக் கிறது" என்று கூறினார் (மத். 19:14ஆ).*

*இரட்சிப்பின் வழியைப் புரிந்துகொண்ட, தேவனுக்கு முன்பாக பாவம் செய்திருப்பதை அறிந்த, இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்தவராக வேண்டும் என்று அறிந்த இளைஞர் அல்லது முதிய வயதுள்ள*

நிலையில் இருக்கும் நீங்கள் இப்பொழுது கர்த்தருடைய இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படிவது தேவையாய் உள்ளது.

### "நான் என்ன செய்ய வேண்டும்?"

நமது பாடங்களில், கிறிஸ்தவராவது எப்படியென்று நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இயேசு, தேவனுடைய குமாரன் என்பது பற்றிய வேதவசனங்களின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களை, ஏற்றுக் கொள்வதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராக முடியும். உலகின் ஒரே மிகச் சரியான நூலாகிய வேதாகமமானது, இயேசு யார் என்றும், அவர் என்ன செய்வதற்காக இவ்வுலகிற்கு வந்தார் என்றும் உங்களுக்குக் கூறியுள்ளது. இச்செய்தியை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களிலிருந்து உங்களை இரட்சிப்பதற்காகச் சிலுவையில் மரிக்கவும், நீங்கள் தேவனுடைய பிள்ளையாவதற்குச் சாத்தியக் கூற்றை உங்களுக்குத் தரவுமே உலகிற்கு வந்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

மேலும் நீங்கள், "நான் எனது பாவங்களிலிருந்து திரும்பியிருக்கிறேனா?" என்று உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் இவ்வுலகில் என்றுமே முழுமையானவராய் இருப்பதில்லை, ஆனால், மனந்திரும்புதலின் மூலம் பாவத்தை உங்கள் வாழ்விலிருந்து எடுத்துப் போட்டு விட்டு, இப்பொழுது முதல் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாகவே பின்பற்றுவதற்குத் தீர்மானம் செய்ய வேண்டும். உங்களின் உண்மையான மனந்திரும்புதலைத் தொடர்ந்து, இயேசு உங்கள் கர்த்தராயிருப்பார், நீங்கள் வாழும் வாழ்க்கையில் வேத வசனங்கள் உங்கள் வழிகாட்டியாய் இருக்கும்.

அடுத்ததாக, உங்கள் பாவங்களின் மன்னிப்பிற்காக உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்த ஒருவரை நீங்கள் காண வேண்டும். உங்கள் சமூகத்தில் கிறிஸ்துவின் சபை ஒன்று இருக்கலாம். அப்படியிருந்தால் அச்சபையின் உறுப்பினர் ஒருவரைக் கண்டு, உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தக்கூடிய ஒரு கிறிஸ்தவரை அறிமுகப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். நீங்கள் அவ்விதம் ஒரு கிறிஸ்தவரிடம் அறிமுகப்படுத்தப்படும்போது, மற்றவர்களுக்குமுன் நீங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட விரும்புவதாகவும், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக நீங்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள் ஞானஸ்நானப்படுத்தப்பட விரும்புவ

*தாகவும் அவரிடம் கூறுங்கள். இதில் உங்களுக்கு உதவுவதில் அவர் மகிழ்ச்சியடைவார்.*

### "கிறிஸ்துவின் சபையை நான் எவ்விதம் கண்டறிய முடியும்?"

*மார்க்கத்தில் குழப்பம் மிகுந்த இந்நாட்களில் நீங்கள், கர்த்தருடைய சபைக்குள் பிரவேசித்து, தொடர்ந்து கர்த்தருடைய சபையாகவே இருக்கும் ஒரு கூட்டத்தாருடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பலாம். அவர்கள் தங்களை எப்படிக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர் என்பது இதை நீங்கள் கூறக்கூடிய ஒரு வழியாகும். அவர்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட எந்தப் பெயரையும் தரித்துக் கொள்வதில்லை. அவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்றும், வேதவசனங்களில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்ற பெயர்களாலும் மட்டுமே அழைத்துக் கொள்வார்கள். சபைக்கு, வேதாகமத்தில் குறிப்பிடப்படாத ஒரு பெயரைத் தங்களுக்கு அவர்கள் அளித்துக் கொண்டிருந்தால், அவர்கள் நாமகரணக் கூட்டத்தின் ஒருபகுதி என்பதற்கு அதுவே ஒரு அடையாளமாகும், ஆகையால் அவர்கள் கர்த்தருடைய சபையிலிருந்து பிரிந்துபோன மற்றும் மாறுபட்டவர்களாகின்றனர்.*

*ஒரு குழுவினர் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவர்கள்தானா என்று காண்பதற்கு இன்னொரு வழி, அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுகிறார்களா என்று பரிசீலனை செய்வதேயாகும். அவர்களின் இலக்குகள் மற்றும் நோக்கங்களைத் தீர்மானிக்க நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகள் இங்கே தரப்படுகின்றன:*

*நீங்கள் புதிய ஏற்பாட்டின் சபையாராக மட்டுமே இருக்கமுயற்சி செய்கின்றீர்களா?*

*அன்பு, இரக்கம், ஒருமைப்பாடு, சாந்தம், மற்றும் சமுதாயத்தினருக்கு ஊழியம் ஆகியவை நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா?*

*நீங்கள் ஞாயிறன்று ஆராதனைக்குக் கூடிவரும்போது, அந்த ஆராதனை ஊழிய முறைமை எவ்விதம் நடக்கின்றது?*

*நீங்கள், அப். 20:7ன்படி வாரத்தின் முதல்நாள்தோறும் (ஒவ்வொரு ஞாயிறும்) கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கிறீர்களா?*

*நீங்கள் புதிய ஏற்பாட்டு எடுத்துக்காட்டின்படி இசைக் கருவிகள் இல்லாமல் பாடல்கள் பாடுகின்றீர்களா?*

*நீங்கள் இயேசுவின் நாமத்தினால் ஜெபம் செய்கின்றீர்களா?*

*வேதாகமம் ஒன்றை மட்டுமே உங்கள் சட்ட நூலாகவும், வழிகாட்டியாகவும் நீங்கள் படிக்கின்றீர்களா?*

*ஒவ்வொரு ஞாயிறுதோறும் உங்கள் வரவுக்குத் தக்கதாக நீங்கள் காணிக்கை கொடுக்கின்றீர்களா? (1 கொரி. 16:1, 2).*

*நீங்கள் சபை என்ற முறையில் எவ்வித அமைப்பைப் பெற்றிருக்கின்றீர்கள்? ஊழியர்கள், போதகர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் என்பதைக் காட்டிலும் அதிகமான வேறு அமைப்புகள் பெற்றிருக்கின்றீர்களா?*[1]

*உங்களுக்கு இப்பூமியில் தலைமையிடம் எதுவும் உள்ளதா, அல்லது கிறிஸ்துவை மட்டுமே உங்கள் தலைவராகப் பார்க்கின்றீர்களா?*[2]

*இவ்வுலகத்தில் உங்களின் ஊழியம் என்ன?: நமது கர்த்தரின் பிரதான கட்டளையை நிறைவேற்றத் தேடுகிறீர்களா? (மத். 28:19, 20)?*

*அவர்கள் யாரென்று நீங்கள் அறியத்தேடுவதால், இக்கேள்விகளைக் கேட்பதே ஞானமுள்ள ஒரு செயலாகும். நீங்கள் கர்த்தருடைய சபையின் உறுப்பினராக விரும்புகிறீர்கள், ஒரு நாமகரணக் கூட்டத்தின் உறுப்பினராக நீங்கள் விரும்பவில்லை.*

*நீங்கள் கிறிஸ்துவின் சபை ஒன்றைக் காண முடியவில்லையென்றால், நீங்களே ஒன்றை நிலைநாட்ட வேண்டும். நீங்கள் அதை எவ்விதம் செய்யலாம் என்பது இங்கு தரப்பட்டுள்ளது. உண்மையான தேவனுக்கு ஊழியம் செய்வதில் உற்சாகமுள்ள ஒரு மனிதரைக் கண்டறியுங்கள். அவர் தமது வேதாகமத்தைப் படிக்கையில் இந்நூலையும் வாசிக்கும்படி கூறுங்கள். பிறகு அவரிடம், அவர் உங்களுடன் இணைந்து ஒரு கிறிஸ்தவராகி, உங்கள் சமுதாயத்தில் கர்த்தருடைய சபையாராயிருக்க விருப்பமா என்று கேளுங்கள். அவர் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால், நீங்கள் ஒருவரையொருவர் ஞானஸ்நானப்படுத்தலாம். நீங்கள் அருகில் உள்ள (முழுக்காட்டப்*


போதுமான தண்ணீர் உள்ள) நீரோடை, குளம் அல்லது குட்டை ஆகிய ஏதேனும் ஓரிடத்திற்குச் செல்லலாம்.

நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்தும்போது, வேத வசனங்களின் மூன்று கட்டளைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். முதலாவதாக நீங்கள் அவரிடம் பின்வரும் கேள்வியைக் கேளுங்கள்: "இயேசு கிறிஸ்துவை, தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" இக்கட்டளையை ரோமர் 10:10ல் நாம் காணுகின்றோம். அவர், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று, தாம் விசுவாசிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.


இரண்டாவதாக, நீங்கள் அந்த மனிதரை, பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவின் சரீரத்தில்-சபையில் - ஞானஸ்நானப்படுத்துகிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆகவே, அங்கு கூடியிருப்பவர்களின் நன்மைக்காகவும், என்ன நடக்கிறது என்பதையும் அவருக்கு நினைவூட்டுவதற்காகவும், அவரை ஞானஸ்நானப்படுத்துமுன், என்ன நடக்கிறது என்பதை உரத்த குரலில் விளக்குங்கள். இதை நீங்கள் கூறும் விதத்திற்கு இங்கே ஒரு எடுத்துக்காட்டு தரப்படுகின்றது (இது மத். 28:19, 20; ரோமர் 6:3; அப். 2:38; மற்றும் மாற். 16:16 ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்).

> பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, புதிய ஏற்பாட்டின் சபையாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள், கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் இரத்தத்தின் மூலம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக நான் உங்களை ஞானஸ்நானப்படுத்துகிறேன்.

மூன்றாவதாக, நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்துகையில், அவரை முழுவதுமாக முழுக்காட்டுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படுதலாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (ரோமர் 6:4). ஞானஸ்நானப்படுத்துதல் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு சில விளக்கப்படங்கள் தரப்படுகின்றன:



*குறைவான ஆழமுடைய தண்ணீரில், ஞானஸ்நானம் பெறுபவர் கால்களை நீட்டி அமர்ந்து கொண்டு, தாம் முழுவதுமாக நீருக்குள் அடக்கம் செய்யப்படும் வகையில் பின்புறமாக சாயலாம்.*



*ஆழமான நீர் உள்ள ஞானஸ்நானத் தொட்டி அல்லது நீர் நிலையில், ஞானஸ்நானம் பெறுபவர் நின்றபடியே, தாம் முழுவதும் நீருக்குள் முழக்கப்படும் படியாகப் பின்புறமாக சாய்ந்து கொள்ளலாம்.*

நீங்கள் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபின், அதே முறையில் அவர் உங்களை ஞானஸ்நானப்படுத்தும்படி செய்யுங்கள். அவர் உங்களிடம் அதே கேள்வியைக் கேட்க வேண்டும், மற்றும் அவர் ஏன் உங்களை ஞானஸ்நானப்படுத்துகிறார் என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும். நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்துகையில் நடந்தவாறே, இப்போதும் நடக்க வேண்டும்.

நீங்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட பிறகு, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக, கர்த்தருடைய சபையில் ஒரு உறுப்பினராக ஆகின்றீர்கள். கடந்த காலத்தில் கர்த்தருடைய சபை உங்கள் சமுதாயத்தில் இல்லாதிருந்தாலும், இப்பொழுது அது இருக்கிறது-ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவின் சபையாராய் இருக்கின்றீர்கள்! நீங்கள் கிறிஸ்தவரானதால், நீங்கள் வாழும் இடத்தில் சபையை நிலை நாட்டியிருக்கின்றீர்கள்.

## படி இரண்டு: கிறிஸ்தவராக வாழுதல்

தொடர்ந்து, என்றுமே நிற்காத-கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதே நீங்கள் எடுத்து வைக்கும் இரண்டாவது படியாக உள்ளது. இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வாழவே விரும்புவீர்கள். (“மூப்பர்கள் எப்படியிருக்க வேண்டும்,

எல்லா கிறிஸ்தவர்களும் எப்படி இருக்க வேண்டும்'' என்ற தலைப்புள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

ஒரு கிறிஸ்தவர் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகின்றார்? கிறிஸ்தவர் என்ற பெயரில் மறைமுகமாய்க் காணப்படும் வழியில் அவர் வாழ்கிறார் என்பதே அவருடைய வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சிறந்த வழியாகும்: அவர் ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்து வாழ்ந்த முறையிலேயே அவர் வாழ்கின்றார் (பிலி. 1:21). கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவே வாழ்க்கையாய் இருக்கின்றார்.

## வேதவசனங்களை ஆராய்தல்

கிறிஸ்துவைப் பின்பற்றும் எவரொருவரும், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தல் என்ற முக்கியமான தனிப் பண்பு கொண்டிருப்பார். இயேசு, ஒவ்வொரு வழியிலும் முழுமையான வராகவே இருந்தார், ஆனால் அவரது வாழ்வில் காணப்பட்ட, விசுவாசத்துடன் பிதாவுக்குக் கீழ்ப்படிதல் என்ற பண்பானது நானும் நீங்களும் பின்பற்றும்படி அமைத்துக் கொள்ளக் கூடியதாகும். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய சித்தத்திற்காக வேதவசனங்களை ஆராய்ந்து பார்த்து, அதன் பிறகு அவரது சித்தத் திற்கு தாழ்மையுடன், பயத்துடன் மற்றும் அன்புடன் கீழ்ப்படிவ தேயாகும். ஒரு கிறிஸ்தவர் என்பவர் தேவனுடைய வசனத்துடன் நெருங்கியிருக்கிறார். தினமும் அவர் அதைப் படித்து, அதிலிருந்து கற்றுக் கொண்டவைகளை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கின்றார்.

## இயேசுவைப் போல வாழ்க்கை நடத்த முயற்சி செய்தல்

இயேசுவுக்காக வாழ்வதில், "பொன் விதி", இரக்கம் மற்றும் ஜெபம் ஆகிய மூன்று கொள்கைகளும்கூட நம்மை வழி நடத்த வேண்டும். இயேசுவைப்போல நாம் இருப்பதற்கு, "நான் எப்படி நடத்தப்பட விரும்புகின்றேன்?" என்ற வினாவை நாம் எப்பொழுதும் கேட்டுக் கொள்வது ஒரு நல்ல வழியாகும். நாம் எப்படி நடத்தப்பட விரும்புகின்றோமோ, அவ்வழியிலேயே மற்றவர்களை நாம் நடத்துவது என்பதே "பொன் விதி"யை (மத். 7:12)ப் பின்பற்றுதல் ஆகும். கிறிஸ்துவின் வாழ்க்கை முறை இவ்வழியிலேயே அமைந்திருந்தது, இவ்வுலகத்தில் வாழ மிகச் சிறந்த வழியும் இதுவே ஆகும்.

இயேசு இரக்கமுள்ள மனிதராயிருந்தார். "இரக்கம்" என்றால்

*மற்றவர்களுடன் அவர்களது உணர்வுகளை "உணருதல்" என்று பொருள்படும். ஏழைகள், தேவையில் இருப்போர், மற்றும் தனிமைப்பட்டவர்கள் ஆகியோருடன் இயேசு அன்பாகவே இருந்தார். அவரது இருதயம் அவர்களுக்காகச் சென்றது. அவர் அவர்களுக்கு ஊழியம் செய்தார். ஆகவே, ஒரு கிறிஸ்தவர் மற்றவர் களைப் பற்றி அக்கறையுள்ளவராகவும், தன்னால் முடிந்த அளவு அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தமது அன்பைத் தொடர்ந்து வெளிப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் (மத். 9:36).*

*இயேசுவானவர், தேவனுடைய குமாரனாயிருந்தும், அவர் அடிக்கடி தனியாகவும், வெளிப்படையாகவும், சிறுகுழுக்களுடனும்-பிதாவினிடத்தில் ஜெபம் செய்தார். ஒரு கிறிஸ்தவரும் தேவனிடத்தில் தொடர்ந்து ஜெபிக்கிறார்.*

*நீங்கள் இப்பொழுது கிறிஸ்தவராயிருப்பதால், தேவன் உங்கள் பிதாவாய் இருக்கிறார். அவர் உங்களைத் தமக்குச் சொந்தமானவர் என்று உரிமை பாராட்டுகின்றார். விசுவாசமுள்ள இருதயத்துடன் தொடர்ந்து அவரிடத்தில் ஜெபியுங்கள். உங்கள் வாழ்வில் அவரது சித்தம் செய்யப்படும்படிக் கேளுங்கள், இயேசுவின் நாமத்தினாலே அவரிடத்தில் ஜெபியுங்கள். நீங்கள் தேவனிடத்தில் எவ்விதம் ஜெபிக்கக் கூடும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு இங்குள்ளது:*

*தேவனை அழைத்தல்: அன்பான தகப்பனே,*
*அவரைத் துதித்தல்: உமது நாமம் பரிசுத்தப்படுவதாக.*
*அவருக்கு நன்றி செலுத்துதல்: நீர் எங்களுக்கு அளித்துள்ள.. (சிலவற்றைக் குறிப்பிடலாம்) ஆசீர்வாதங்களுக்காக, நீர் தயாளமுள்ளவராய் இருப்பதற்காக நன்றி.*
*அவரிடத்தில் வேண்டுதல்: இதோ இவைகளே எங்களால் கூற முடிந்த அளவுக்கு எங்கள் தேவைகளாய் உள்ளன. இவைகள் உமது சித்தத்திற்கு ஏற்றவைகளா யிருந்தால் இவைகளை எங்களுக்குத் தாரும்.*
*அவரிடத்தில் வேண்டுதல்: நாங்கள் மற்றவர்களை மன்னிப்பது போல, எங்கள் பாவங்களை மன்னியும். தீமையிலிருந்து எங்களை விடுவியும்.*
*அவரைத் துதித்தல்: எல்லா மகிமையும் உம்முடைய வைகளே.*
*முடிவு: இயேசுவின் நாமத்தில் உம்மிடம் ஜெபிக்கிறோம். ஆமென்.*

கர்த்தர் தமது சீஷர்களுக்குக் கற்பித்த மாதிரி ஜெபத்திலிருந்து மேற்கண்ட ஜெபத்தின் அமைப்பு எடுக்கப்பட்டிருப்பதை (மத். 6:9-13) நீங்கள் அநேகமாக அடையாளம் கண்டிருப்பீர்கள். அவரது மாதிரி ஜெபத்தின் சில பகுதிகள் நமக்குப் பொருந்தாதவையாகும் (எடுத்துக் காட்டாக, ராஜ்யம் வரும்படி அவர் ஜெபிக்கக் கற்பித்தது நமக்குப் பொருந்தாது. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் அன்று அவரது ராஜ்யம் வந்துவிட்டது), ஆனாலும் அந்த ஜெபத்தின் பெரும்பகுதி, நமக்கும் பொருந்துவதாய் உள்ளது. இங்கு தரப்பட்டுள்ள மாதிரி ஒரு எடுத்துக்காட்டாகவே உள்ளது என்பதை நினைவில் வையுங்கள், ஒருவர் தமது சொந்த எண்ணங்களை தேவனிடம் வெளிப்படுத்துவதற்குப் பின்பற்றக்கூடிய ஒரு மாதிரியாகவே இந்த ஜெபம் இங்கு தரப்பட்டுள்ளது.

நீங்கள் எப்பொழுதும் முழுமையாய் இருக்க முடியாது என்ற சத்தியத்தை இங்கு வலியுறுத்துகின்றோம். மனிதர்கள் முழுமையானவர்களாயிருக்க முடியாது, ஆனால் அவரது சித்தத்தை செய்வதற்கு நமது இருதயங்களை நாம் ஒப்புக் கொடுக்க முடியும். நாம் தவறி விழும்போது, எழுந்து நின்று, நம்மைத் துடைத்துக் கொண்டு, மனந்திரும்பி, தேவனிடத்தில் நம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, மறுபடியும் அவரது சித்தத்தைச் செய்வதற்கு நாம் தயாராக முடியும். நாம் அவரது சித்தத்தைச் செய்யக் கடும் முயற்சி எடுக்கின்றோம் என்பதே முக்கியமான விஷயம் ஆகும். முழுமையினால் அல்ல மாறாக, விசுவாசத்தினாலேயே நாம் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம் (எபே. 2:8). விசுவாசம் கொண்டிருத்தல் என்றால்,தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி நேர்மையுடன் தேடுதல் என்று பொருள்படும்.

மற்றவர்களைத் துக்கப்படுத்துதல் போன்ற விஷயங்களினால் நாம் தவறி விடுகின்றபோது, அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, நாம் அதற்காக வருந்தி, எதிர்காலத்தில் நாம் நல்லவை செய்யவே முற்படுவோம் என்று அவர்களுக்கு உறுதியளிக்க வேண்டும் (யாக். 5:16). நாம் செய்த பாவமானது சபை முழுவதையும் துன்பப்படுத்தியிருந்தால், நாம் சபையாருக்கு முன்பாக வந்து நின்று, மன்னிக்கும்படி கேட்டு, கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதரிகளை நமக்காக ஜெபம் செய்யும்படி வேண்டிக் கொள்ள முடியும் (யாக். 5:16). தேவன் நம்மை மன்னிப்பார், சபையும் நம்மை மன்னிக்கும்.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பிரவேசித்ததும், ஆரம்ப கட்டமாக நீங்கள் வேதவசனங்களில், கிறிஸ்துவின் வாழ்வைக் கூறும் பகுதிகளான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரின் நற்செய்தி நூல்களைப் படிக்க விரும்பலாம். இதை வாசிப்பதும், கற்றுக் கொள்வதும், இயேசு இவ்வுலகத்தில் எவ்விதம் வாழ்ந்தார் என்பதை உங்களுக்குப் புரிய வைக்கும். அவரைப்பற்றி நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விஷயமும் அவரை இன்னும் நெருங்கிப் பின்பற்ற உங்களுக்கு உதவும்.

## படி மூன்று: தேவனை ஆராதித்தல்

கிறிஸ்தவராக இருக்க நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய மூன்றாவது படி, தேவனை, தவறாது முறையாக ஆராதனை செய்வதே ஆகும். உங்கள் அருகாமையில் கிறிஸ்துவின் சபை இருந்தால், அவர்களுடன் இணைந்து, ஞாயிறு ஆராதனையிலும், நியமிக்கப்படும் மற்ற ஜெபவேளைகளிலும் தேவனை ஆராதிக்க நீங்கள் விரும்புவீர்கள். ஒவ்வொரு ஞாயிறு அன்றும் அவர்கள் பாடல்கள் பாடி, ஜெபித்து, தேவனுடைய வார்த்தையைக் கற்று, கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, தேவன் அவர்களை ஆசீர்வதித்தமைக்குத் தக்கதாகக் காணிக்கை கொடுக்கும்படி அவர்கள் கூடுவார்கள். அவர்களுடன் இந்த ஆராதனையின் எல்லா வெளிப்பாடுகளிலும் நீங்கள் பங்கேற்க வேண்டும்.

உங்கள் சமுதாயத்தில் கிறிஸ்துவின் சபையொன்று கூடுவதில்லையென்றால், உங்கள் வீட்டிலோ, ஏதாவதொரு வாடகைக் கட்டிடத்திலோ அல்லது ஒரு மரத்தடியிலோ நீங்கள் முறையான, விசுவாசமுள்ள ஆராதனையைத் தொடங்கலாம். காலப்போக்கில், ஆராதனை செய்வதற்கென்று ஒரு இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம். இயேசுவின் நாமத்தினால் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்ற எவ்விடத்திலும் வசனத்தின்படியான ஆராதனை நடைபெற முடியும் என்று புதிய ஏற்பாடு கூறுகின்றது (மத். 18:20).

### சபையாகக் கூடுதல்

புதிய ஏற்பாட்டில், ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் அதாவது ஞாயிற்றுக்கிழமையில் கூடி வந்தனர். இது, கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்த நாள் ஆகும். முதல் கிறிஸ்தவர்கள் இவ்விதமாக ஞாயிற்றுக் கிழமையில் கூடிவந்த போது, இயேசு தமது

*மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நினைவாக ஏற்படுத்திய பந்தியில் அவர்கள் பங்கேற்றனர். அவர்கள் ஒவ்வொரு ஞாயிறன்றும் இப்பந்தியில் கலந்து கொண்டனர் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. இது கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட "கர்த்தருடைய பந்தியாகும்" (1 கொரி. 11:20, 21), எபி. 10:25; 1 கொரி. 11:22; 16:1, 2; மற்றும் அப். 20:7 ஆகியவற்றைக் கவனமாய்ப் படியுங்கள்.*

## கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடித்தல்

*கிறிஸ்து, கர்த்தருடைய பந்தியை உண்டாக்கியபோது, அவர் இரண்டு பொருட்களைப் பயன்படுத்தினார்; திராட்ச இரசமும், புளிப்பில்லாத அப்பமும். இவ்விருந்தைக் கைக்கொள்ளும்படி நமது கர்த்தர் கூறியபோது, அவர் தமது சீஷர்களுடன் பஸ்கா உணவை உண்டு கொண்டிருந்தார். பஸ்கா உணவில் புளிப்பில்லாத அப்பமும், (ஒரு வகை திராட்சையிலிருந்து பிழிந்த இரசமாகிய) திராட்ச இரசமும் தண்ணீரும் கலக்கப்பட்ட கலவையான பானமும் அடங்கியிருந்தன. இயேசு தமது சரீரமானது தமது சீஷர்களுக்காக ஒப்புக் கொடுக்கப் படுவதின் நினைவாக அப்பத்தைப் புசிக்கும்படி சீஷர்களுக்குக் கூறினார். அவர் தமது இரத்தம் அவர்களுக்காகச் சிந்தப்படுவதை நினைவு கூறும் வகையில், திராட்ச ரசத்தில் பானம் பண்ணும்படி அவர்களுக்குக் கூறினார்.*

*நீங்கள், நமது கர்த்தருடைய அறிவுரைகளையும், நடபடிகள் நூலில் கிறிஸ்தவர்களின் முன்னுதாரணத்தையும் பின்பற்ற விரும்புவீர்கள், உங்களில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் யாவரும், ஒவ்வொரு ஞாயிறுதோறும் ஆராதனைக்காகக் கூடி வர வேண்டும். நீங்கள் பாடி, ஜெபம் செய்து, தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆராதனையின் ஒரு கட்டத்தில் இயேசு உங்களுக்குக் கையளித்துள்ள இந்தப் பந்தியிலும், நீங்கள் பங்கேற்க வேண்டும். புளிப்பில்லாத அப்பத்தை ஒரு தட்டில் வைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கும் அந்த அப்பத்திற் காகவும், கிறிஸ்துவின் மாபெரும் தியாகத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். பிறகு, இயேசுவின் சரீரத்தை நினைவு கூர்ந்து, பங்கேற்க விரும்பும் கிறிஸ்தவர்களிடத்தில் அந்த அப்பத்தைக் கொடுங்கள்.*

*கர்த்தருடைய பந்திக்கான அப்பத்தைத் தயாரிப்பதற்குச் சில*

பொருட்களே தேவைப்படுகின்றன: மாவு, தண்ணீர், உப்பு மற்றும் எண்ணைய் ஆகியவை. புளிக்கச் செய்யும் பொருள் அல்லது யீஸ்ட்டு போன்றவை சேர்க்கப்படுவதில்லை. உங்கள் கையளவுள்ள இரு அப்பங்களைச் செய்வதற்கான சமையல் குறிப்பு கீழே தரப்படுகிறது:

> தேவையான பொருட்கள்:
> கோதுமை அல்லது பார்லிமாவு-1 கப்,
> தண்ணீர்-ஒரு தேக்கரண்டியளவு,
> எண்ணெய்-3 தேக்கரண்டியளவு,
> உப்பு-தேவையான அளவு.
>
> செய்முறை:
> மேற்கூறிய பொருட்கள் யாவற்றையும் ஒன்றாகக் கலந்து பிசைந்து கொள்ளவும். பிறகு மாவை மெலிதான வட்ட அப்பங்களாகத் தட்டி எடுத்து மிதமான சூடுள்ள அடுப்பின் மீதுள்ள தோசைக் கல்லில் பத்து நிமிடங்களுக்கு இதை வேக வைக்கவும். நன்றாக வேகவைக்கப்பட்ட அப்பம் தீய்ந்து போகாது. மாவானது முறுகலான அப்பமாகும் வரைக்கும் நெருப்பிலும் வாட்டப்படலாம்.

இரண்டாவதாக, திராட்ச இரசம் நிறைந்த கிண்ணம் அல்லது கிண்ணங்களை எடுத்துக் கொள்ளுங்கள், அந்தக் கிண்ணத்திற்காகவும், நமது பாவமன்னிப்பிற்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் மதிப்புமிக்க இரத்தத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபியுங்கள். ஜெபத்திற்குப் பிறகு, அவர்கள் யாவரும் இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டதை நினைவுகூர்ந்து அருந்தும் வகையில் இக்கிண்ணங்களை அவர்களிடத்தில் கையளியுங்கள்.

இயேசு இந்தப் பந்தியைக் கட்டளையிட்டபோது, திராட்சப் பழ இரசத்தையே அவர் பயன்படுத்தினார். திராட்ச இரசம் உலகெங்கும் பரவலாகக் கிடைக்கின்றது; ஆயினும், உங்கள் பகுதியில் அது கிடைக்காதிருந்தால், திராட்சப் பழங்களைப் பிழிந்தெடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கலாம். திராட்சப்பழம் கிடைக்கும் காலங்களில் இந்த முறையில் இரசம் செய்து பக்குவப்படுத்தி வைத்துக் கொண்டால் அதை ஆண்டு முழுவதும் பயன்படுத்தலாம். உலர்ந்த திராட்சப் பழங்களை தண்ணீரில் வேக வைத்தும் திராட்ச இரசத்தைப் பெறலாம். வேக வைத்து பிறகு, அச்சாற்றிலிருந்து பழத்தோல்களை அகற்றிய பின், அந்த ரசமானது கர்த்தருடைய பந்திக்கு வைக்கப்படலாம்.

## சேர்த்து வைத்தல் அல்லது கொடுத்தல்

*கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுப்பதற்காக ஒவ்வொரு கிறிஸ்தவரும் "சேர்த்து வைக்க" வேண்டியது அவசியமாகும். சபை ஆராதனை கூடி வரும் வேளையில், தக்கதொரு தருணத்தில், புதிய ஏற்பாட்டு போதனையின்படி, ஒவ்வொரு கிறிஸ்தவரும், தாம் பெற்றுக் கொண்டதற்குத் தக்கதாகக் காணிக்கை கொடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் (1 கொரி. 16:1, 2). ஒரு தட்டு அல்லது வேறு விதமான சேகரிக்கும் உபகரணம் சபையாரிடத்தில் எடுத்துச் செல்லப்பட்டு காணிக்கை கொடுக்க உதவி செய்யப்படலாம். அல்லது ஓரிடத்தில் பெட்டியொன்று வைக்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் தங்கள் காணிக்கைகளை அவ்விடத்தில் வந்து செலுத்தலாம். இது ஆராதனையின் ஒரு வெளிப்பாடு என்பதையும், பயபக்தியோடும், மன மகிழ்ச்சியோடும் இது செய்யப்பட வேண்டும் என்பதையும் நினைவில் வையுங்கள். இவ்வாறு கொடுக்கப்படும் காணிக்கைகள், சபையின் ஊழியத்திற்கென்று பயன்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, மற்றவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், ஏழைகளுக்கு உதவவும், வேதபாட வகுப்பிற்கு வேதாகமங்கள் வாங்கவும், சபையின் ஊழியத்துடன் இசைவாயுள்ள வேறு எந்த பணியாவது செய்யப் படவும், சேகரித்த இந்தக் காணிக்கைப் பணத்தைப் பயன்படுத்தலாம். காணிக்கைப் பணத்தை எவ்வழியில் செலவிடுவது என்பதை தனிநபர் அல்ல மாறாக சபையார் கூடித் தீர்மானம் செய்ய வேண்டும்.*

*ஆராதனை ஊழியத்தின் திட்டத்திற்கு இங்கு ஒரு எடுத்துக்காட்டு தரப்படுகின்றது:*

*ஜெபம்*
*பாடல் அல்லது பாடல்கள்*
*வேதவசனங்கள் சிலவற்றின் மீது ஒரு கலந்துரையாடல் அல்லது போதிக்கக்கூடிய போதகர் அல்லது பிரசங்கியார் இருந்தால் ஒரு பிரசங்கம்*
*பாடல்*
*கர்த்தருடைய பந்தியைப் பற்றிய வேதவசனப்பகுதி ஒன்றை வாசித்தல்*
*கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல்*
*பாடல்*
*வரவுக்குத் தக்காற் போன்று காணிக்கை கொடுத்தல்*

*பாடல்*
*ஜெபம்*

*ஆராதனை எவ்விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், மேற்கண்ட செயல்கள் அனைத்தும் அதில் இருக்க வேண்டும்.*

***சபையின் கூட்டங்கள் நடத்துதல்.***

*உள்ளூர் சபையானது தனது பணிகளை "நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்வதற்காக" (1 கொரி. 14:40) அவ்வப்போது அந்த சபையின் ஆண்கள் ஒன்றுகூடி முடிவெடுக்க வேண்டியது தேவையாகின்றது. மூப்பர்கள் இல்லாத நிலையில் இது விசேஷமாக தேவையாகின்றது. தேவனுக்கு சட்டம் ஏற்படுத்துவதற்காக அல்ல, ஆனால் உள்ளூர் சபையானது தனது ஆராதனையையும் மற்ற பணிகளையும் கிறிஸ்துவுக்கு ஏற்ற வழியில் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதே இக்கூட்டங்களின் நோக்கமாகும். ஆராதனை நேரம், அது நடக்கும் இடம், ஆராதனை ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரின் பங்கு, நற்பணிகளுக்குத் திட்டமிடுதல், மற்ற ஆவிக்குரிய விஷயங்களைக் கலந்துரையாடுதல் ஆகியவை இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுகின்றன. இக்கூட்டத்தில் கலந்து கொள்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் போன்ற நடக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியமாகும் (எபே. 4:1-3). "ஒவ்வொருவரும் தாம் நினைப்பதைக் கூற உரிமை பெற்றுள்ளனர், ஆனால் ஒருவரும் தமது வழிதான் செயல்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை அற்றவர்களாய் உள்ளனர்" என்று யாரோ ஒருவர் ஒருமுறை கூறினார். இது ஒரு நல்ல கொள்கையாகும்.*

*சபையின் விஷயங்கள் பற்றிய கலந்துரையாடலில், ஒவ்வொரு முடிவைப் பற்றியும் பின்கண்ட வினாக்கள் கேட்கப்பட வேண்டும்:*

- *இது வேத வசனத்தின்படியானதா?*
- *இது தேவனை மகிமைப்படுத்துமா?*
- *இது நல்லொழுக்கத்தைப் போதிக்குமா?*
- *இது செயல்படுமா?*

இக்கூட்டம் நடக்க வேண்டிய கால இடைவெளி மற்றும் நேரம் ஆகியவை பற்றி இக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் மனிதர்கள் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். அநேக மனிதர்கள் கூடக் கூடிய நேரம் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் பொறுப்பை மாற்றி மாற்றிக் கொடுப்பது ஞானமுள்ளதாகும். இது ஒரு பொறுப்புதானே தவிர, அதிகாரமுள்ள பதவியல்ல, இது அக்கூட்டத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல உதவுகின்ற வழியாகும். இதில் எடுக்கப்படும் முடிவுகள் அங்குள்ள மனிதர்களின் இசைவைப் பெற்றிருக்க வேண்டும். முடிவுகளைப் பற்றிய பதிவுகளை யாரேனும் ஒருவர் செய்ய வேண்டும். ஒரு கூட்டமானது பின்வருமாறு நடத்தப் பெறலாம்:

ஜெபம்
பழைய முடிவுகள் - கடந்த கூட்டங்களில்
விடப்பட்டவை பற்றிய கலந்துரையாடல்;
கொடுக்கப்பட்ட பொறுப்புகளின் நிறைவேற்றம்
மற்றும் வளர்ச்சி பற்றிய அறிக்கைகள்
புதிய முடிவுகள் - தேவைகளைப் பற்றிய ஆராய்வு,
எதிர்காலத் திட்டங்கள், பொறுப்புகளை
ஒப்படைத்தல், மற்றும் ஆவிக்குரிய கருத்துக்களில்
அக்கறை
ஜெபம்

## தேவனை தினமும் ஆராதித்தல்

தேவனை உங்கள் இருதயத்திலும், உங்கள் சரீரப்பிரகாரமான குடும்பத்தாரோடும் நீங்கள் தினமும் ஆராதிக்க விரும்புவீர்கள். ஒவ்வொரு உணவு வேளையிலும், தேவனிடத்தில் ஜெபித்து, உண்பதற்கு முன் அந்த உணவை உங்களுக்கு அளித்தமைக்காக அவருக்கு நன்றி கூறுங்கள். உங்கள் குடும்பம் முழுவதும் இணைந்து, அவரிடத்தில் உங்கள் தேவைகளை முன் வைத்து, அவர் உங்களுக்குச் செய்துள்ளவற்றிற்காக அவருக்கு நன்றி கூறித் துதியுங்கள்.

ஞாயிறு தவிர மற்ற நாட்களிலும் கூட நீங்கள் தேவனை ஆராதிக்க விரும்புவீர்கள். நீங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் எப்போதுமே, கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, காணிக்கை கொடுத்தல் உள்ளிட்ட ஆராதனை முறையில் பங்கேற்பீர்கள். இதைத் தவிர, வேதபாடம், ஜெபம் மற்றும் பாடல்கள் பாடுதல் ஆகியவற்றிற்காக மற்ற நாட்களில்

*சக கிறிஸ்தவர்களுடன் ஒன்றுகூட விரும்பலாம். கிறிஸ்தவர்கள் அடிக்கடி இவ்விதம் சேர்ந்து ஆராதிக்கவும், கர்த்தருக்குள் ஒருவரை யொருவர் ஊக்கப்படுத்தவும் கூடுவது முக்கியமானதாகும்.*

*கர்த்தருடைய ஊழியர் என்ற முறையில், அவரது வசனத்தை தினமும் வாசித்து, அதன் மூலம் அவர் உங்களுடன் பேசுவதற்கு நீங்கள் இடம் தர வேண்டும். அதே போல் உங்கள் ஜெபங்களின் மூலம் நீங்கள் அவருடன் தினமும் பேச முடியும்.*

## படி நான்கு: நற்செயல்கள் செய்தல்

*கர்த்தருக்கு ஊழியம் செய்வதே நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய நான்காவது படியாகும். நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவைப் பின்பற்று கிறவராகிய ஒரு கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள், எனவே அவர் வாழ்ந்த வழியிலேயே நீங்களும் வாழுங்கள். அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார் என்று நமக்குக் கூறப்படுகிறது (அப். 10:38).*

### நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்

*கிறிஸ்தவர்கள் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல், சுவிசேஷப் பணி செய்ய வேண்டும். இயேசு தாம் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்பு "உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள்..." (மாற். 16:15) என்று நமக்குக் கூறினார். கிறிஸ்து, நற்செய்தியை உருவாக்குவதற்காகவே மரித்தார்; அது ஒவ்வொரு நபருக்கும் பிரசங்கிக்கப்படும்படி நாம் கவனிக்க வேண்டும். நீங்கள் நற்செய்தி ஊழியம் செய்யக் கூடிய ஒருவழி, மற்றவர்கள் இந்த நூலைப்படித்துப் பார்க்கும்படி கூறுவதே ஆகும். அவர்கள் கிறிஸ்தவர்களாகும்படி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்த, நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்வோம்.*

### *மற்றவர்களை பக்திவிருத்தியடையச் செய்தல்.*

*கிறிஸ்தவர்களின் மற்றொரு பணி, மற்றவர்களை பக்திவிருத்திய டையச் செய்தல் ஆகும். "edify" என்ற ஆங்கில வார்த்தை கட்டி எழுப்புதல் என்று பொருள்படுகின்றது. உங்களது உள்ளூர் சபை பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாய் நிலைநிற்கும் போது, தயவு செய்து இன்றைக்கான*

சத்தியம் உலகளாவிய ஊழியப் பள்ளிக்கு எழுதுங்கள் (முகவரி இந்த நூலின் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது), நீங்கள் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள உதவும் சில நூல்களை நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைப்போம். கிறிஸ்துவைப் பற்றிய நமது அறிவிலே வளர்ந்து, அவரது வழியில் தொடர்ந்து சென்று, மற்றவர்களும் நம்மோடு வளரும்படி நாம் தொடர்ந்து ஊக்கப்படுத்துவோம்.

### மற்றவர்களுக்கு உதவுதல்

தர்ம காரியங்களில் ஈடுபடவும் நீங்கள் விரும்புவீர்கள். ''ஏழைகளுக்கு உதவ நான் என்ன செய்ய முடியும்?'' என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். தேவையில் உள்ளவர்கள் மீது அக்கறை கொள்ளாமல் இருந்தால் நீங்கள் கிறிஸ்துவைப் போலாக முடியாது (மத். 25:31-46).

கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய சில நல்ல செயல்கள் இங்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது:

மற்றவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தல்
நோயாளிகளுக்கு சேவை செய்தல்
தேவனைப் பற்றி குழந்தைகள் கற்றுக்கொள்ள உதவுதல்
பசியுற்றோருக்கு உணவளித்தல்
விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவுதல்
சிறையில் இருப்போரைச் சந்தித்தல்
உபசரிப்பை நடைமுறைப்படுத்துதல்
கிறிஸ்தவ ஏடுகளை விநியோகித்தல்
ஆராதனை கூட்டங்களுக்கு மற்றவர்களை அழைத்தல்
மற்றவர்களுக்காக ஜெபித்தல்
படிக்க இயலாதவர்களுக்கு வேதாகமத்தைப் படித்துக் காண்பித்தல்

இயேசு, ஊழியம் செய்யவே இவ்வுலகிற்கு வந்தார். அவர் ஊழியம் கொள்வதற்கு அல்ல, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவுமே வந்தார் (மாற். 10:45). இயேசுவைப் போல மற்றவர்களுக்காக மரிப்பது என்பது நம்மால் முடியாது; ஆனால் மற்றவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தல், அவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர உதவி

செய்தல், அவர்கள் துன்பப்படுகையில் அவர்களுக்கு இரக்கம் காட்டுதல் போன்ற செயல்களின் மூலம் நாம் மற்றவர்களுக்காக வாழ முடியும்.

## முடிவுரை

அப். 8ல் எத்தியோப்பிய மந்திரியின் வரலாற்றை நீங்கள் படித்திருக் கிறீர்களா? இல்லையென்றால் இதைப் படிப்பதைச் சற்று நிறுத்திவிட்டு, அவருடைய வரலாற்றை எடுத்துப் படியுங்கள். நற்செய்தியைப் போதிக்கும்படி பிலிப்பு அவரிடத்தில் அனுப்பப்பட்டார். அந்த எத்தியோப்பிய மனிதர் நற்செய்தியைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர் ஆனார்.

பிலிப்பு ஒரு ஏவப்பட்ட மனிதராயிருந்தார். நீங்கள் வாசிக்கும் இந்த நூல் (இதன் கடைசிப் பகுதியாகிய புதிய ஏற்பாடு தவிர) ஏவப்பட்டது அல்ல. ஆயினும், இப்பக்கங்களில், கிறிஸ்து கொண்டு வந்த இரட்சிப்பைப் பற்றியும், அவர் நிலைநாட்டிய சபையைப் பற்றியும் புதிய ஏற்பாடு போதிப்பவைகளை நீங்கள் வாசித் திருக்கிறீர்கள். இவ்விதமாக இந்தப் பக்கங்கள் யாவும் உங்களுக்கு, ஏவப்பட்ட நூலாகிய வேதாகமத்தையே சுட்டிக்காட்டுகின்றன. நீங்கள் இங்கு வாசித்தவைகளை வேத வசனங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது புதிய ஏற்பாடு போதிப்பதையே நாங்கள் உங்களுக்குப் போதிக்க முயற்சி செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

எத்தியோப்பிய மனிதர் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் ஒரு வாய்ப்பளித்தார். அது ஒரு நீண்ட, ஆராய்ச்சி மிக்க படிப்பாக இருக்க வில்லை; ஆனால் கிறிஸ்தவராவது எப்படி, கிறிஸ்தவராக வாழ்வது எப்படி என்று அவர் அறிந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது. அதே விதமான போதனையை உங்களுக்கு அளிக்கவே நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். இப்பொழுது வாய்ப்பு உங்களுடையதாயிருக்கிறது. இந்த வாய்ப்பை நீங்கள் முழுமையாக, நிறைவாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடத்தில் இருந்து மனமார்ந்த விடை பெறுகிறோம். தேவன் தமது குமாரன் மூலமாக அளித்துள்ள நற்செய்திக்கு நீங்கள் கீழ்ப்படியும்படி அவர் தமது ஐசுவரியமுள்ள ஆசீர் வாதங்களை உங்கள் மேல் பொழிவாராக. ஒருவேளை இங்கில்லாவிடினும், பரலோகத்தில் உங்களைச் சந்திக்க ஆவலாய் இருக்கிறோம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 323 ம் பக்கங்களில்)*

1. “இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்ற கேள்வியானது நித்திய நோக்கமுடையதாக இருப்பது ஏன்?
2. பிறந்த குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தேவையா? தேவையில்லையா? ஏன்?
3. ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?
4. கிறிஸ்துவின் சபையை நீங்கள் கண்டறிய உதவும் சில வினாக்கள் யாவை?
5. ஞானஸ்நானம் என்றால் தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் என்று போதிக்கும் வேதவசனப்பகுதி எது?
6. ஒரு கிறிஸ்தவரின் வாழ்வைக் சுருக்கமாகக் கூறச் சிறந்த வழி எது?
7. கிறிஸ்தவர் ஒருவர், தேவனுடைய வசனத்துடன் ஏன் நெருங்கி யிருப்பார்?
8. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் தேவனை ஆராதிக்க சபையார் கூடி வருவார்கள். எவ்விதமான ஆராதனை வெளிப்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும்?
9. இயேசு, கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியபோது பயன்படுத்திய இரண்டு பொருட்கள் யாவை?
10. ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்தவராக வாழ நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நான்கு படிகள் யாவை?

## வார்த்தை உதவிகள்

**வேதவசனங்கள்** - பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் கொண்ட வேதாகமம். பழைய ஏற்பாடானது யூதர்களின் சட்ட நூலாக இருந்து, புதிய ஏற்பாட்டுக்கு வழியை ஏற்படுத்தியது (கலா. 3:24), இப்புதிய ஏற்பாடு இந்நாட்களில் அனைவரும் பின்பற்ற வேண்டியதாய் உள்ளது. தேவன் இவ்வுலகத்தைப் படைத்த வரலாற்றின் சுருக்கம், அவர் தேர்ந்து கொண்ட இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட சட்டங்கள், ஏவப்பட்ட கவிதை நூல்கள், மற்றும் தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாகக் கொடுத்த போதனைகள் ஆகியவை அடங்கியுள்ளன.

[1]புதிய ஏற்பாட்டு சபைகளின் அமைப்புகள் மிகவும் எளிமையான தாகவும், அடிப்படையானதாகவும் இருந்தன. முதலாவது போதிக்கிறவர் களும், கற்பிக்கிறவர்களும், தேவனுடைய வசனத்தைப் போதித்து, கற்பித்து வந்தார்கள். இரண்டாவதாக, ஆவிக்குரிய வளர்ச்சியில் முதிர்ந்த ஒவ்வொரு உள்ளூர் சபைகளிலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்கள் (கண்காணிகள், மேய்ப்பர்கள், போதகர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள்) அந்தந்த உள்ளூர் சபையை கண்காணிக்கவும், வழி நடத்தவும் செய்தார்கள். மூன்றாவ தாக, ஒவ்வொரு உள்ளூர் சபையிலும், மூப்பர்களின் கண்காணிப்பில், உதவிக்காரர்கள் சபையில் ஊழியம் செய்து வந்தார்கள். [2]புதிய ஏற்பாடு, சபைக்கு ஒரே ஒரு தலையையே பெயரிடுகிறது: கிறிஸ்து. அவருடைய சபைக்கு பூமியில் தலைமையிடம் எதுவுமே கிடையாது. ஒவ்வொரு உள்ளூர் சபையும், கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை மாத்திரமே பின்பற்றுகின்றன.